Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

Case No. **CC.No.94/2017**

Deposition of PW 8

| | |
|---|---|
| Name | : **ஞானபிரகாசம் (ஓய்வு)** |
| Father's Name/Husband Name | : நடராஜன் |
| Village | : தர்மபுரி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.08.2026**

**A3 prssent. Other absent. ~~-~~எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை.**

நான் கடந்த 30.09.2014 ம் தேதி பிற்பகல் சேலம் நுன்அறிவு பிரிவி காவல் துணைகண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது தர்மபுரியில் வசித்து வருகிறேன்.

கடந்த 16.08.2011 ம் தேதி கடத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 11 மணியளவில் சேலம் மனிபால் மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் தலைமை காவலர் 1766 ஆறுமுகம் அவர்களை அனுப்பி அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கோபால் த/பெ.சின்னசாமி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் ஆஜராகி எனது பார்வைக்கு வைத்த புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முகாந்திரம் இருந்தபடியால் அன்றைய தினமே கடத்தூர் காவல் நிலைய குற்ற

எண்.255/2011 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324, 323, 379 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

**நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.08.2011 ம் தேதி பகல் 1 மணியளவில் சாட்சிகள் சக்தி மற்றும் தனபால் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன்.

**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

சாட்சிகள் 1 முதல் 5 வரையுள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றைய தினம் 15.15 மணியளவில் வழக்கின் எதிரிகள் சுரேஷ், சக்குமா, ராணி, பழனியாம்மாள் ஆகியோர்களை கேத்துரெட்டிப்பட்டி காளிகொட்டாய் அருகில் எதிரி சக்குமா வீட்டின் அருகில் கைது செய்து நிலையம் கொண்டுவந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து அரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளரின் உத்தரவின் பேரில் வழக்கு கோப்பை தொடர் விசாரணைக்காக மொரப்பூர் காவல் ஆய்வாளர் லட்சுமனகுமார் அவர்கள் வசம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குற்றம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 13.08.2011 நேரம் இரவு 7 மணி என்றால் சரிதான்.

சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் 16.08.2011 ம் தேதி காலை 8 மணிக்கு தகவல் கிடைத்தது.

16.08.2011 ம் தேதிக்கு பின்னிட்டுதான் வழக்கில் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

சம்பவம் தொடர்பாக மனிபால் தனியார் மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்தது.

அ.சா.1 முதல் முதலில் சிகிச்சைக்கு தர்மபுரி அரசு மருத்துவமனையில் சேர்ந்தார்.

14.08.2011 ம் தேதி தர்மபுரி அரசு மருத்துவமனை பரித்துரையின் பேரில் அ.சா.1 மனிபால் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தார்.

அ.சா.1 தர்மபுரி அரசு மருத்துவமனை பரித்துரையின் பேரில் தான் மனிபால் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தார் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

முதல் தகவல் அறிக்கையில் இ.த.ச பிரிவு 379 வருவதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால் சரியல்ல.

நான் முதல் தகவல் அறிக்கையில் இ.த.ச பிரிவு 379 என்ற தவறான சட்டப்பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கை இ.த.ச பிரிவு 392 ன் கீழ் பதிவு செய்யாமல் நான் இ.த.ச பிரிவு 379 ன் கீழ் பதிவு செய்தேன் என்றால் தவறு.

தலைமை காவலர் 16.08.2011 ம் தேதி காலை 11 மணியளவில் புகார் வாக்குமூலத்தை என்னிடம் ஒப்படைத்தார் என்றால் சரிதான்.

நான் புகார் வாக்குமூலத்தை பெற்றவுடன் காலை 11 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக முதற்கட்ட விசாரணை எதுவும் நான் செய்யவில்லை.

புகார் வாக்குமூலத்தில் உள்ள வாசகத்தை வைத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன் நான் வேறு எந்த சாட்சிகளையாவது விசாரித்தேனா என்று ஞாபகமில்லை.

காயம்பட்ட நபர் சம்பவ இடத்தை அடையாளம் காட்டவில்லை. மற்ற சாட்சிகள் அடையாளம் காட்டினார்கள்.

யார் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார்கள் என்ற விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

பட்டியல் சாட்சி 1 முதல் 5 வரையுள்ளவர்களை 16.08.2011 ம் தேதி விசாரித்தேன் என்றால் சரிதான். ஆனால் அதில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

முதல் 2 சாட்சிகளை மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன், மற்ற 3 சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன்.

நான் மருத்துவமனையில் பட்டியல் சாட்சி 1, 2 ஆகியோர்களை விசாரிக்கும்போது நல்ல நிலையில் தான் இருந்தார்கள்.

நான் சாட்சிகளை முதற்கட்ட விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தவறு என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக விபத்து பதிவேட்டை நான் பெறவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 சேலம் மனிபால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தபோது தன்னை 5 நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

நான் மேற்கண்ட 5 நபர்கள் மேல் மட்டும்தான் சம்பவத்தில் ஈடுப்பட்டதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்திலேயே வைத்து மாதிரி வரைபடத்தை தயார் செய்தேன் என்றால் சரிதான்.

சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்திலேயே சாட்சிகளை விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சொன்ன தேதி சொன்ன இடத்தில் சொல்லிய விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சம்பவயிடம் செல்லாமல் சம்பயிடத்தில் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்திலேயே சாட்சிகளையும் ஆவணங்களையும் தயார் செய்து எதிரிகளின் மீது ஒரு தவறான முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**